பாதுகாப்புச் சபை

Distr.: பொது
2015 டிசெம்பர் 9

## தீர்மானம் 2250 (2015)

## 2015 டிசெம்பர் 09 ஆம் திகதி பாதுகாப்புச் சபையின் 7573ஆவது கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது

*பாதுகாப்புச் சபையானது,*

பெண்கள், சமாதானம், பாதுகாப்பு மற்றும் தலைமை சார்ந்த அனைத்து அறிக்கைகள் மீதான 1325 (2000), 1820 (2008), 1889 (2009), 1960 (2010), 2106 (2013), 2122 (2013) and 2242 (2015) எனும் தீர்மானங்களை மீட்டி, பயங்கரவாதத்தை எதிர்கொள்ளல் தொடர்பான 2178 (2014), 2195 (2014) மற்றும் அதன் தலைமை அறிக்கையான S/PRST/2015/11, மற்றும் யுத்தத்துக்குப்பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் S/PRST/2012/29 எனும், அதன் தலைமை அறிக்கைகள் மற்றும் S/PRST/2015/2 எனும் அதன் தீர்மானம்

ஆயுத முரண்பாட்டில் பொது மக்களைப் பாதுகாத்தல் தொடர்பான 1265 (1999) மற்றும் 1894 (2009) எனும் அதன் தீர்மானங்களை மீட்டி

ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் மற்றும் தத்துவங்களையும் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் பாதுகாப்புச் சபையின் கீழான சாசனத்தை *நினைவுகூர்ந்து,*

இத்தீர்மானத்தின் பின்னணியில் 18-29 வயதுக்கு உட்பட்ட நபர்கள் இளையோர்கள் என வரையறைசெய்யப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு, மேலும் பொதுச் சபையின் A/RES/50/81 மற்றும் A/RES/56/117 எனும் தீர்மானங்களில் இளையோர் என்ற வரைவிலக்கணம் உட்பட, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இந்த வரைவிலக்கணப் பதத்தில் வேறுபாடுகள் இருக்கலாம் என்பதையும் *கவனத்தில் கொண்டு,*

* தொழில்நுட்பக் காரணங்களினால் 2016 ஜனவரி 05 ஆம் திகதி மீள்வெளியீடு செய்யப்பட்டது.

எப்போதும் அறியப்படாத வகையில் தற்போது உலகில் அதிக எண்ணிக்கையினர் இளையோர்கள் என்பதையும் அவர்களில் பொதுவாகவே பெரும்பான்மையினர் ஆயுத முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதையும் *அங்கீகரித்து,*

அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உட்பட ஆயுத முரண்பாடுகள் மூலம் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மத்தியில் இளையோர்கள், கல்வி, பொருளாதார வாய்ப்புக்களை அடைய முடியாது சீர்குழைந்துள்ளமையானது நிலையான சமாதானம் மற்றும் இனநல்லினக்கத்தை அடைவதில் பாரிய பாதிப்பாக உள்ளது என்பதில் *அக்கறைசெலுத்தி,*

சமாதானம் மற்றும் பாதுகாப்பை பேணும் முயற்சியில் இளையோர்களின் முக்கியத்துவம் மற்றும் சாதகமான பங்களிப்பை *அங்கீரித்து,*

நிலைத்திருத்தல், உள்வாங்குதல் மற்றும் வெற்றிகரமான சமாதானம் பேணல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் எனும் ஒரு முக்கிய நோக்கில், தடுத்தல் மற்றும் முரண்பாட்டுத் தீர்வில் இளையோர்கள் முக்கிய பங்குவகிக்க முடியும் என்பதை *மதித்து,*

இறுதியான சமாதானத்தை அடைதல் மற்றும் நீதிக்கும் இனநல்லிணக்கத்துக்கும் பங்களிப்புச் செய்வதில் இயையோர்கள் செயற்பாட்டுரீதியாக பங்கேற்க முடியும், அதாவது உள்வாங்கள் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து தற்போது சிறந்த குடித்தொகைப் பங்கிலாபத்தைக் கொண்ட ஒரு பாரிய எண்ணிக்கையிலான இளையோர் சனத்தொகையானது இறுதியான சமாதானம் மற்றும் பொருளாதார சௌபாக்கியம் அடையப் பெறுவதில் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதையும் அங்கீரித்து,

விஷேடமாக இளையோர்கள் மத்தியில் வன்முறைகள் மற்றும் வன்முறைமிக்க கடும்போக்குவாதத்துக்கான தீவிரப்போக்கின் அதிரிப்பு ஸ்திரத்தன்மைக்கும் அபிவிருத்திக்கும் அச்சுறுத்தலாகவும், அதேபோல சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளைச் சீர்குழைத்து முரண்பாட்டைத் தூண்டும் வகையிலும், தீவிரவாதத்துக்கு துணைநிற்கும் வகையிலும், வன்முறைகளின் தீவிரத்தன்மை அதிகரிப்புக்கு வழிவகுக்கும் சூழ்நிலைகள் மற்றும் காரணிகளை எதிர்கொள்வதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் என்பதை *அங்கீகரித்தது,*

ஆட்சேர்ப்பு மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளுக்காக இளையோர்களைத் தூண்டும், அதேபோல நிதி சேரிப்பு, திட்டமிடல் மற்றும் அவர்களது செயற்பாடுகளைத் தயாரித்தலில் தீவிரவாதிகள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் உலகமயமான சமூகத்தில் புதிய தகவல் தெடர்பாடல் தொழில்நுட்பங்கள் குறிப்பாக இணையத்தளப் பாவனை அதிரித்துள்ளதுடன், மனித உரிமைகள்

மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தும் எனைய சர்வதேச சட்டங்களின் கீழான கடப்பாடுகளுக்கு ஏற்பவும், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு துணைநிற்கும் தொழில்நுட்பங்கள், தொடர்பாடல்கள் மற்றும் வளங்களை தீவிரவாதிகளின் சுரண்டலிலிருந்தும் தடுப்பதில் கூட்டிணைவின் அடைப்படையில் உறுப்பு நாடுகள் செயற்பட வேண்டும் என்பதையும் குறித்து *அக்கறை செலுத்தி*,

தீவிரவாதத்துக்குச் சாத்தியமானதும் முரண்பாடுகளை தூண்டும், சமூகபொருளாதார அபிவிருத்தியைத் ஸ்தம்பிக்கச் செய்து பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பின்மையை ஊக்குவிக்கும் வன்முறைமிக்க கடும்போக்குவாதத்தை தடுத்தல் மற்றும் எதிர்கொள்வதில் இளையோர்கள் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்பதை *கவனத்தில் கொண்டு*,

ஐக்கிய நாடுகளின் உபாயங்கள் மற்றும் பதிலளிப்பின் மைய விடயமாக இளையோர்களின் பங்கேற்பு, தலைமைத்துவம் மற்றும் வலுவூட்டலை ஒன்றிணைத்து வன்முறைமிக்க கடும்போக்குவாதத்திலிருந்து தடுத்தலுக்கானதொரு திட்டதை செயலாளர் நாயகம் தயாரிப்பார் என்பதையும் கவனத்தில் கொண்டும்,

யுத்த மற்றும் யுத்தத்துக்குப் பிந்திய சூழ்நிலையில், வன்முறைமிக்க கடும்போக்குவாதத்துக்கு எதிரானதும் வன்முறைமிக்க கடும்போக்குவாதத்தைத் தடுப்பதற்குமான செயல்திட்டம் மற்றும் சமாதானத்தை ஊக்குவிப்பதிலும் இளையோர்களின் சாதகமான பங்களிப்புக்களையும், உள்வாங்கள்களை உறுதிசெய்வதற்கான அடித்தளம் இடுவதிலும், சமாதானத்தை ஊக்குவிப்பதற்குமான சமாதானமும் பாதுகாப்பும் இளையோர்கள் உலக பேரவை 2015 ஆகஸ்ட், சமாதானமும் பாதுகாப்பும் இளையோர்கள் தொடர்பான அம்மான் பிரகடனம், வன்முறைமிக்க கடும்போக்குவாதத்துக்கு எதிரானதும் வன்முறைமிக்க கடும்போக்குவாதத்தைத் தடுப்பதற்குமான செயல்திட்டம் எனும் உலக இளையோர் மாநாடு செப்டெம்பர் 2015, எனும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் இளைய சந்ததியின் பங்கேற்பு மீதான வழிகாட்டல் தத்துவங்களைக் கொண்ட இளையோர்களுக்கான உலக நிகழ்ச்சித்திட்ட செயற்பாட்டை கவனத்தில் கொண்டு,

சமாதானத்தைப் பேணி கட்டியெழுப்புவதில் இளையோர்களைப் பற்கேற்கச் செய்ய தேசிய அரசாங்கங்கள், பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் தற்போது முன்னெடுக்கும் பணிகளை ஏற்று,

முரண்பாட்டின் உந்துதலாக தீவிரவாதத்தைப் போஷிக்கும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் சமய ரீதியான புறக்கணிப்புக்கள், சகிப்புத்தன்மையின்னை, அதேபோல வன்முறைமிக்க

கடும்போக்குத்தன்மை போன்றனவற்றை அடையாளம் கண்டு எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தை குறித்துக்காட்டும், முரண்பாடுகளைத் தடுத்தல், நீண்டகால ஸ்திரத்தன்மையும் நிலையான சமாதானத்துக்குமான பிரதான அம்சமாக உள்வாங்கிய அபிவிருத்திக்கான ஐநாவின் பொதுவானதொரு அணுகுமுறையை விருத்திசெய்வதில் உறுப்பு நாடுகளை *ஊக்குவித்தும்,*

முரண்பாடு மற்றும் முரண்பாட்டுக்குப் பிந்தியகால இளையோர்களின் பாதுகாப்பையும் சமாதான நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்க வகையில் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணி ஊக்குவிக்க பங்களிப்புச் செய்ய முடியுமாகவும், முரண்பாட்டைத் தீர்த்து சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான எந்தவொரு பூரணமான உபாயத்திலும் ஆயுதப் போராட்டத்தில் இளையோர்கள் உட்பட பொதுமக்கள் பாதுகாப்பானது ஒரு முக்கிய நோக்காக இருக்க வேண்டும் என்பதை அங்கீகரித்து,

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பற்றிய உறோம சாசனத்தின் ஏற்பாடுகளின் பொருத்தப்பாட்டையும் கவனத்தில் கொண்டு,

## பங்கேற்பு

1. சமாதான நடவடிக்கைகள் மற்றும் முரண்பாட்டுத் தீர்வுகளிலும் இளையோர்களின் அர்த்தமிக்க பங்கேற்புக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையை நிறுவுவதிலும் தீவிரவாத்தைப் போஷிக்கும் வன்முறைமிக்க கடும்போக்குவாதத்தை எதிர்கொள்வதற்கமான நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் உள்ளடங்களாக, தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் முரண்பாட்டைத் தடுத்தல் மற்றும் தீர்த்துவைத்தல் பொறிமுறைகளின் அனைத்து மட்டங்களிலும் தீர்மானமெடுத்தலில் இளையோர் பிரதிநிதித்துவ உள்வாங்களை அதிரிப்பதற்கு அனைத்து உறுப்பு நாடுகளும் வலியுறுத்தப்படுகின்றன;
2. பேச்சுவார்த்தைகள் மற்றும் சமாதான உடன்படிக்கைகளை அமுல்படுத்தும் வேளை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் உரிய செயற்பாட்டாளர்களும் அழைக்கப்பட்டு பொருத்தமான வகையில் இளையோர்களின் பங்கேற்பையும் கருத்துக்களையும் உள்வாங்கல், புறம்பாக சில குறிப்பிட்ட நோக்குகள் உள்ளிட்ட; அதாவது (அ) இழப்பீட்டு, மீள்குடியேற்ற மற்றும் புணர்வாழ்வளித்தலில், மீள்ஒருங்கிணைவு மற்றும் முரண்பாட்டுக்குப் பிந்திய நிர்மானப்பணிகளில் இளையோர்களின் தேவைகள்; (ஆ) உள்ளூர் இளையோர்களின் சமாதான முன்னெடுப்புக்கள் மற்றும் முரண்பாட்டுத் தீர்வுக்கான தேசிய செயன்முறைகளில் சமாதான உடன்படிக்கைகளை அமுல்படுத்தும் பெறிமுறைகளில் இளையோர் பங்கேற்பு

போன்ற உதவி நடவடிக்கைகள்; (இ) சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் முரண்பாட்டுத் தீர்வில் இளையோர்களை வலுப்படுத்தும் பொறிமுறைகள் என்பனவற்றில் அவர்களது புறக்கணிப்பை அங்கீகரிப்பதானது அனைத்து சமூகங்களிலும் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்குப் பங்கமாக அமையுமென்பதனையும் மனதில் கொள்ளல்

3. பொருத்தமானதும், உள்நாட்டு மற்றும் சர்வதேச இளையோர் குழுக்களுடனான கலந்துரையாடலின் ஊடாக உள்ளிட்ட, இளையோர் சார்ந்த அக்கறைகளை கவனத்தில் கொள்ளுமிடத்து பாதுகாப்புச் சபையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்;

பாதுகாப்பு

4. இளையோர்கள் உட்பட பொது மக்களைப் பாதுகாக்கும் 1949 இன் ஜெனீவா சாசனங்கள் மற்றும் 1977 இன் அதற்கான மேலதிக விதிமுறை ஏற்பாடுகள் உள்ளிட்ட சர்வதேச சட்டங்களின் கீழான தமக்கு உரிய கடப்பாடுகளுக்குள் கண்டிப்பாக வரையறுத்துக் கொள்வதற்கு ஆயுத போராட்டத்திலான அனைத்துத் தரப்புக்களையும் பணித்தல்;
5. மேலும் அகதி நிலையுடன் தொடர்பான1951 இன் சாசனம் மற்றும் 1967 இன் அதன் விதிமுறை ஏற்பாடுகள், 1979 இன் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிக்கும் சாசனம் மற்றும் 1999 இன் தெரிவின் அடிப்படையிலான விதிமுறை ஏற்பாடுகள் மற்றும் வலதுகுறைந்தோர் உரிமைகள் சாசனம் என்பனவற்றின் கீழான தமக்கு உரிய கடப்பாடுகளுக்குள் செயற்படுவதற்கு அனைத்துத் அரசுகளையும் பணித்தல்;
6. மேலும் சர்வதேச அக்கறையுடனான மிகவும் கடுமையான குற்றச்செயல்களுக்கான தண்டனைத் தவிர்ப்புக்கெதிரான போராட்டமானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சீரற்ற மற்றும் கலப்பு நியாயாதிக்கமன்றம் மற்றும் தேசிய நியாயாதிக்கமன்றங்களின் விஷேட பிரிவுகள் மூலம் இந்த குற்றச்செயல்களுக்கான விசாரணைப் பணிகள் வலுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தண்டனைகளிலிருந்து நீங்குவதற்கு தமக்குரிய கடப்பாடுகளை பூர்த்திசெய்யுமாறு உறுப்பு நாடுகளை பணிப்பதுடன், மேலும் இளையோர்கள் உட்பட பொது மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மனிதத்துவத்துக்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய கடுமையான குற்றச்செயல்களுக்கெதிராகவும், இன ஒழிப்புக்கும் பொறுப்பானவர்களை விசாரணைசெய்து தண்டிக்குமாறும் பணிக்கிறது;

7. அனைத்துவகையான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளிலிருந்தும் இளையோர்கள் உட்பட பொதுமக்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க ஆயுத போராட்ட தரப்பினரையும் பணித்து;
8. உரிய சர்வதேச சட்டத்தின் மூலமான ஏற்பாடுகளுக்கமைய தமது அதிகாரத்துக்கு உட்பட்ட தமது நிலப்பரப்புக்குள் இளையோர்கள் உட்பட அனைத்து தனிநபர்களினதும் மனித உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தி மதிப்பதை அரசுகள் மீண்டும் உறுதிசெய்து, தனது மக்களை இனப்படுகொலை, யுத்தக் குற்றச்செயல்கள், இனச் சுத்திரிப்பு, மற்றும் மனிதத்துவத்துக்கெதிரான குற்றச்செயல்களிலிருந்தும் பாதுகாப்பதற்கும் ஒவ்வொரு அரசும் கடமைப்பட்டுள்ளது என்பதை மீண்டும் உறுதிசெய்தல்;
9. ஆயுத முரண்பாட்டுக் காலம் மற்றும் முரண்பாட்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இளையோர்கள் உட்பட பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிசெய்யும் சர்வதேச சட்டத்துடனான உடன்பாட்டின்படி உரிய நடவடிக்கைகள் எடுப்பதை கவனத்தில் கொள்ளுமாறு உறுப்பு நாடுகள் வேண்டப்படுகின்றன;

## தடுத்தல்

10. வேறுபட்ட பின்னணிகளுடனான இளையோர்கள் உட்பட, இளம் செயற்பாட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்டும் வன்முறைத் தடுப்பு செயற்பாடுகள் மற்றும் சமூக ஒற்றுமைக்கான உதவிகளை மேற்கொள்ளவும் போதிய உதவிகளை வழங்கி உள்வாங்கப்படுவதற்கமான சாதகமான சூழலுக்கான வசதிசெய்ய உறுப்பு நாடுகள் வலியுறுத்தப்படுகின்றன;
11. சமூக பொருளாதார அபிவிருத்தி, உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்ட உதவித் திட்டங்கள், மற்றும் இளையோர் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் தொழில் பயிற்சிகள், அவர்களது கல்வி முன்னேற்றம், மற்றும் இளையோர் தொழில் முயற்சிகள் மற்றும் ஆக்கபூர்வமான அரசியல் பங்கேற்பு உள்ளிட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு சாதகமான முறையில் இளையோர்கள் பங்களிப்புச் செய்ய முடியுமான கொள்கை வகுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்;
12. குடியியல் அமைப்புக்கள் மற்றும் உள்வாங்கிய அரசியல் செயன்முறைகளில் ஆக்கபூர்வமான முறையில் பங்கேற்கும் திறனுடன் இளையோர்களை பலப்படுத்தும் பொருத்தமான வகையில் சமாதானத்துக்கான தரமான கல்விக்கு உதவ உறுப்பு நாடுகள் வேண்டப்படுகின்றன;
13. வன்முறை, தீவிரவாதம், இனவாதம், மற்றும் அனைத்து வகையான பாகுபாட்டு நடவடிக்கைகளிலும் தமது பங்கேற்பை தவிர்த்து, இளையோர் பங்கேற்புடனான ஒரு

சமாதானக் கலாசாரம், சகிப்புத்தன்மை, கலாசாரங்களுக்கிடையிலும், சமயங்களுக்கிடையிலுமான கலந்துரையாடலை ஊக்குவிப்பதற்கான நிறுவனரீதியான பொறிமுறைகளைக் கவனத்தில் கொள்ள அனைத்து உரிய செயற்பாட்டாளர்களும் பணிக்கப்படுகின்றனர்;

## கூட்டிணைவுகள்

14. ஐக்கிய நாடுகள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் உதவி அலுவலகம், ஐக்கிய நாடுகள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதியம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், ஐநா-பெண்கள், மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம், மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர், போதைப் பொருள் மற்றும் குற்றச்செயல்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலம், மற்றும் பிராந்திய மற்றும் சர்வதேச மட்ட செயற்பாட்டாளர்களுடன் கூட்டிணைந்து அவற்றை முன்னெடுக்கும் உரிய அமைப்புக்கள், நிதியங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட, சமாதான முயற்சிகளிலும், யுத்த மற்றும் யுத்தத்துக்குப் பின்னரான சூழ்நிலைகளிலும் இளையோர்களின் தேவைகள் மற்றும் பங்கேற்பைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான வகையில் தமது அரசியல், நிதியியல், தொழில்நுட்ப மற்றும் இதர உதவிகளையும் அதிகரிக்குமாறு உறுப்பு நாடுகள் வலியுறுத்தப்படுகின்றன;
15. தீவிரவாதத்தைப் போஷிக்கும் வகையிலான இளையோர்கள் மத்தியில் தீவிரத்தன்மை அதிகரிப்பதிலிருந்து, வன்முறை மற்றும் வன்முறைமிக்க கடும்போக்குவாத நிலைக்கு இட்டுச்செல்லும் சூழ்நிலைகள் மற்றும் காரணிகளை எதிர்கொள்வதில், ஆயுத முரண்பாட்டின் போதும், அதன் பின்னரும் இளையோர்களை அர்த்தமிக்க வகையில் பங்கேற்கச் செய்யும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் உபாயங்களுக்கான வழிகளுக்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் உள்ளிட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆணைக்குழுவின் பாரிய பங்கு குறிப்பிடத்தக்கது;
16. இளையோர்கள், குடும்பங்கள், பெண்கள், சமய, கலாசார மற்றும் கல்வித் தலைவர்கள் மற்றும் எனைய அக்கறையுடனான சமூக அமைப்புக்களையும் வலுப்படுத்தி இவ்வாறான வன்முறைமிக்க கடும்போக்குவாத நடவடிக்கைகளை எதிர்கொள்வதில் இணைந்த அணுகுமுறைகளை ஏற்று சமூக உள்வாங்கள் மற்றும் ஒற்றுமையை ஊக்குவித்தல் உட்பட, தீவிரவாத்தைப் போஷிக்கும் வகையில் வன்முறைமிக்க கடும்போக்குவாதத்தை வியாபிக்கச்

செய்யும் சாத்தியமிக்க சூழ்நிலையை எதிர்கொள்வதில் தீவிரவாத செயற்பாடுகளைத் தூண்டும் வன்முறைமிக்க கடும்போக்குவாத சொற்பிரயோகங்களை நிறுத்துவதற்கான உபாயங்களை விருத்திசெய்வதில் உரிய உள்ளூர் சமூகங்கள் மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களின் பங்கேற்பை உறுதிசெய்ய உறுப்பு நாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன;

## பங்கேற்காமையும் மீள்ஒருங்கிணைவும்

17. பின்வரும் குறித்த நோக்குகளின் அடிப்படையில்: (அ) இளையோர் ஓரங்கட்டப்படுவதைத் தடுக்கும் இளையோர்களின் கூட்டிணைவுடனாக விருத்திசெய்யப்பட்டதும் கல்வி, தொழில் மற்றும் பயிற்சிகளின் ஒருங்கிணைவையும், சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதும் பால்நிலை உணர்தன்மையுடனான இளையோர் தொழில் வாய்ப்புக்கள், உள்வாங்கிய தொழிலாளர் கொள்கை, தனியார் துறையுடனான கூட்டிணைவுடனான தேசிய இளையோர் தொழில் செயல் திட்டத்தை அங்கீகரித்தல் (ஆ) சமாதானக் கலாசாரத்தை ஊக்குவித்து உரிய கல்வி வாய்ப்புக்கள் ஊடாக தொழிலாளர் கேள்வியைப் பூர்த்திசெய்யும் இளையவர்களின் இயலளவு மற்றும் திறன்கள் விருத்தியிலும் முதலீடு செய்தல், (இ) இளையோர் தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை நிகழ்ச்சித்திட்டங்களில் பங்காளர்களாக இளையவர்கள் வழிநடாத்தும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் அமைப்புக்களுக்கு உதவுதல் உட்பட, ஆயுத முரண்பாட்டுத்தன்மை காரணமாக பாதிக்கப்பட்ட இளையோர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டான ஆயுதக்களைவு, படையணிக்களைவு, மற்றும் மீள்ஒருங்கிணைவுக்கான திட்டமிடலில் பங்கேற்பவர்களை ஊக்குவிக்கிறது,
18. இளையோர்கள் உட்பட சனத்தொகையில் அவர்களது உள்ளார்த்தத்தை அறியும் வகையில் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 41வது சரத்தின் கீழ் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து அது தயார்நிலையில் உள்ளதாகக் கருதவும்;

## அடுத்த முன்னெடுப்புக்கள்

19. ஆயுத முரண்பாட்டுக் காலம் மற்றும் முரண்பாட்டுக்குப் பின்னரான சூழ்நிலையில் இளையோர்களின் தேவைகள் பற்றிய ஒருங்கமைப்பையும், இடைவினையையும் மேம்படுத்துவதில் செயலாளர் நாயகத்தின் இளையோர் தொடர்பான பிரதிநிதி, இளையோர் அகதிகள் தொடர்பான விஷேட பிரதிநிதி உள்ளிட்ட ஐக்கிய நாடுகளின் உரிய

அமைப்புக்கள், தூதுவர்கள், விஷேட பிரதிநிதிகள் மற்றும் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதிகளையும் அழைத்தல்;

20. உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்திலான திறன்மிக்க பின்னூட்டங்களை ஆற்றுப்படுத்துவதற்கு சமாதானச் செயற்பாடுகள் மற்றும் முரண்பாட்டுத் தீர்வுகளுக்கு இளையோர்களின் சாதகமான பங்களிப்பு பற்றியதொரு முன்னேற்ற ஆய்வை முன்னெடுப்பதற்கு செயலாளர் நாயகம் வேண்டப்படுவதுடன், மேலும் இந்த ஆய்வின் பெறுபேறுகள் பாதுகாப்புச் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் கிடைக்கப்பெறச் செய்யுமாறு செயலாளர் நாயகம் வேண்டப்படுகின்றார்;

21. அதேபோல இந்த தீர்மானத்தின் கீழான ஆயுத முரண்பாட்டுச் சூழலில் இளையோர்கள் மற்றும் இளையோர்களுடன் தொடர்பான தடுத்தல், பங்கிணைவு, பங்கேற்பு, பாதுகாப்பு, தொடர்பின்மை மற்றும் மீள்ஒருங்கிணைவு எனும் தகவல்கள் உள்ளிட்ட விடயங்களை களநிலவர அறிக்கையிலும், இந்த தீர்மானத்தை அமுல்படுத்தல் நடவடிக்கைகளை சபை நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடக்கமாறு செயலாளர் நாயகம் வேண்டப்படுகிறார்;

22. குறித்த விடயத்தில் செயற்பாட்டுரீதியாக இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.